[2013 *மார்ச்* 26

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

கடைமடை ரெகுலேட்டர்

***7182—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, காலமநல்லூர் ஊராட்சி, அம்மனாற்றின் குறுக்கே கடைமடை ரெகுலேட்டர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, காலமநல்லூர் ஊராட்சியில் மஞ்சளாறு கடைமடைப் பகுதி, அன்னப்பன்பேட்டை ரெகுலேட்டருக்குக் கீழே அம்மனாறு என்ற பெயரிலே ஓர் ஆறு சுமார் 6.5 கிலோ மீட்டர் தூரம் சென்று வங்காள விரிகுடா கடலிலே கலக்கிறது. கடல் உயரும் காலங்களில் கடல் நீர் அம்மனாற்றின் வழியாக உட்புகுந்து விளைநிலங்களைப் பாதிப்படைய வைக்கின்றது. இதனைத் தவிர்ப்பதற்காக,

“வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்”

என்ற வள்ளுவரின் வாய்மொழி வழி நடக்கின்ற மாண்புமிகு காவேரித் தாயினுடைய அரசு, ஆசிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் பூம்புகார் தொகுதி, காலமநல்லூர் ஊராட்சி, அம்மனாற்றின் குறுக்கே கடல்நீர் உட்புகாமல் தடுக்க கடைமடை ரெகுலேட்டரைக் கட்டுவதற்கு உத்தேசித்துள்ளது என்பதை இந்த நேரத்திலே தங்கள்வாயிலாக தெரிவித்துக்கொண்டு, ஆசிய வங்கி நிதியுதவி கிடைக்கப் பெற்றவுடன் இதேபோல 31 இடங்களில் பணிகள் நடைபெறும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 மார்ச் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

திரு. சு. பவுன்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் நீதியின் துணை கொண்டு காவேரியிலிருந்து நாம் பெறவேண்டிய உரிமையைப் பெற்றெடுத்த பொன்னியின் செல்வி அம்மா அவர்களை வணங்குகிறேன். கடைக்கோடிப் பகுதியாக இருக்கிற என்னுடைய தொகுதியின் காலமநல்லூர் ஊராட்சியிலே ஏறக்குறைய 3,000 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட அந்தப் பகுதியிலே வெள்ளக் காலத்திலே உப்பு நீர் புகாமல் தடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு சென்ற ஆண்டு 2012–2013 இல், 1,200 கோடி ரூபாய் நிதியை அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் இன்றைக்கு என்னுடைய பகுதியிலே அந்த ரெகுலேட்டர் அமைப்பதற்கு வழங்கப்படும் என இந்த நேரத்திலே அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

70—

கால்நடை கிளை நிலையம்

***21537—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, குமராட்சி ஒன்றியம், சிவபுரி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,